08.06.2026

அ.வ.எண். 95/2018

வா.சா.1 – திருமதி.ஜோதிமணி, த/பெ. ஆறுமுகத்தேவர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 08.06.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 3 ம பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1991 ம் ஆண்டில் என் தாயார் தாவா சொத்தை விலைக்கு வாங்கியபோது அளந்து பார்த்து வாங்கவில்லை என்றால் அளந்து பார்த்து வாங்கினோம். அளந்து பார்த்து வாங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2005 ம் ஆண்டில் பிரதிவாதிகள், தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தை கிரயம் பெற்றபோது, தென்புற சொத்தில், நீள, அகலங்களில் குறைபாடு உள்ளது என பிரதிவாதிகளுக்கு தகவல் தெரிவித்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அதனை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதிகளிடம் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள பூமியில் எங்களுடைய நிலம் 7 X 34 சதுரடி நிலம் உள்ளது, எனவே அதனை அளந்து பார்த்து கிரயம் பெற்று கொள்ளுங்கள் என கூறினோம்.

2. மேற்படி 7 X 34 சதுரடி பூமியானது, பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள பூமியை கிரயம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதிகளுக்கு பூமியை விற்பனை செய்தவர்களின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், ஏற்கனவே தாவா சொத்திற்கும், அதன் தென்புறத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் இடையில் என்னுடைய தாயார் கிரயம் பெற்ற நாளிலேயே ஒரு கிழமேல் சுற்றுச்சுவர் இருந்ததாக எனது குறுக்குவிசாரணையில் ஒப்புகொண்டுள்ளேன் என்றால் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவர் இடிந்துவிட்டது. காலியிடமாக இருந்தது.

3. சுற்றுச்சுவர் இடிந்த பின்னிட்டு, பிரதிவாதி 2012 ல் சுற்றுச்சுவர் கட்டினார் என்றால் சரிதான். சர்வேயர் மூலமாக அளந்து உங்கள் அளவுக்குள்

கட்டிக்கொள்ளுங்கள் என என் அம்மா சொன்னார். அதைப்போல, பிரதிவாதிகளின் சொத்திற்கு மேல்புறத்தில், தென்வடலாக சுற்றுச்சுவரை பிரதிவாதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தபோது, அதை எதிர்த்து என் தாயார் அ.வ.எண்.3107/2012 வழக்கை மாண்புமிகு கோவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட அ.வ.எண்.64/2017 என கோப்புக்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் 27.03.2018 அன்று சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 2012 ல் கட்டப்பட்ட சுற்றுச்சுவருக்கு தென்புறம் உள்ள பிரதிவாதிகளுடைய சொத்தில் நானோ, எனது தாயாரோ, அல்லது சகோதரிகளோ எந்த இடையூறும் செய்யக்கூடாது என தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் நாங்கள் அவர்களது இடத்திற்கு செல்லக்கூடாது என்றும், அவர்கள் எங்கள் இடத்திற்கு வரக்கூடாது என்றும் தீர்ப்பானது. தீர்ப்பு வந்து 2 மாதங்கள் கழித்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

5. 2018 ம் ஆண்டில், தாவா சொத்திற்கு தென்புறத்தில் பிரதிவாதிகள் புதிதாக எந்த சுற்றுச்சுவரும் கிழமேலாக எழுப்பவில்லை என்றால் சரிதான். அதற்கு தென்புறத்தில் அவர்கள் கடை கட்டியுள்ளார்கள். பிரதிவாதிகள் அரசியல் பின்புலம் உடையவர்கள் என்றும், அவர்கள் எங்களை மிரட்டினார்கள் என்றும், நான் காவல் நிலையத்தில் வாய்மொழியாக புகார் கொடுத்தேன் என்றும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.2018 ல் சுவரை எழுப்ப வேண்டும் என அறிவுறுத்தினேன், ஆனால் அவர்கள் கேட்கவில்லை, எனவே வழக்கு தாக்கல் செய்துள்ளளேன்.

6. ஏற்கனவே நீதிமன்றத்தில் முடிவு செய்த விஷயத்தில், புதிது புதிதாக பிரச்சனை உருவாக்கி மேற்படி வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகளை மனரீதியாக துன்புறுத்தி வருகிறேன் என்றும், வழக்கு காலதாமத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்கு மூலம் இல்லை என்றும், முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கானது செலவுத்தொகையுடன்

தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur